தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## அனுமன் தேடிய “சஞ்சீவினி” மூலிகை: இமயமலையில் கண்டுபிடிப்பு?

இமயமலையில் உயிர் வாழ்வதற்கு மிகவும் சிரமப் படும் ஒரு பகுதியில் உயிர்களைப் பாதுகாக்க உதவும் ரோடியோலா என்ற ஓர் அதிசய மூலிகையை அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். உயிர் காக்க உதவும் இந்த மூலிகையானது, ராமாயண காலத்தில், அனுமனால் தேடப்பட்ட சஞ்சீவினி மூலிகையாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் இந்த மூலிகை சோலோ என்று அழைக்கப்படுகிறது. இந்த மூலிகையின் அரிய குணங்கள் குறித்து இன்னும் தெளிவாகக் கண்டறியப் படவில்லை என்றாலும், லடாக் பகுதிவாசிகள் இதன் இலைகளை உணவுப் பொருளாகப் பயன்படுத்தி வருகின்றனர்.லே பகுதியில் உள்ள மலைப்பகுதி ஆய்வுக்கான ராணுவ அமைப்பின் விஞ்ஞானிகள் இந்த மூலிகையின் மருத்துவ குணங்களை ஆராய்ந்து வரும் நிலையில், இதனை ‘சஞ்சீவினி’ மூலிகை என்றே விஞ்ஞானிகள் கருதுகின்றனர். விஞ்ஞானிகள் இது பற்றிக் கூறுகையில், இந்த மூலிகை உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்துகிறது. கதிரியக்கத்தின் விளைவுகளில் இருந்தும் உயிர்களைப் பாதுகாக்கிறது. மன உளைச்சல், கவலை ஆகியவற்றுக்கு சிறந்த நிவாரணியாகவும், உடலில் ஜீரண சக்தியை மேம்படுத்தும் தன்மையும் இந்த மூலிகைக்கு இருப்பது தெரியவந்துள்ளது என்று கூறுகின்றனர். இந்தப் பகுதியைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நமது ராணுவ வீரர்களுக்கு இந்த மூலிகை உதவியாக இருக்கும், மேலும், ரோடியோலா மூலிகை குறித்து ஏற்கெனவே பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆய்வு செய்து வருகிறது.

## வத்திராயிருப்பு வட்டார விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, வத்திராயிருப்பு வட்டார விவசாயிகளுக்கு மதுரை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவ மாணவிகள் 3 மாத காலம் கிராமப்புற பணி அனுபவத் திட்டத்தின் கீழ், வேளாண்மை சாகுபடி முறைகள் மற்றும் நவீன சாகுபடி முறைகள் குறித்து பயிற்சி அளிக்கிறார்கள்.

இக் கல்லூரியின் மாணவிகள் அபிராமி, மணிமேகலை, இந்துமதி, பிரியங்கா, வளர்மதி, விமல்ராணி, விஜயலட்சுமி, ஷீனா ஐசக் ஆகியோர் அடங்கிய குழுவினர் இப் பயிற்சியை அளிக்கிறார்கள். சேதுநாராயணபுரத்தில் முன்னோடி விவசாயி குருசாமி முன்னிலையில், மாணவிகள் விஜயலட்சுமி, பிரியங்கா ஆகியோர் இப் பயிற்சியை அளித்தனர். இலந்தைக்குளம் கிராமத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் கணேசபாண்டியன் தலைமையில், விவசாயி கருணாகரன் முன்னிலையில் இப் பயிற்சி நடைபெற்றது. பயிற்சியை மாணவி மணிமேகலை தலைமையில் உள்ள குழுவினர் அளித்தனர். நத்தம்பட்டி கிராமத்தில் முன்னோடி விவசாயி ராஜய்யா முன்னிலையில், மாணவி ஷீனா ஐசக் இப் பயிற்சியை விவசாயிகளுக்கு அளித்தார். திருந்திய நெல் சாகுபடி, தென்னையில் ஏற்படும் பிரச்னைகளும் அதற்கான தீர்வுகளும், குதிரைவாலி உள்ளிட்ட தானியப் பயிர் சாகுபடி முறை, நடவு முறையில் துவரைப் பயிர் சாகுபடி முறை குறித்த செயல்முறை விளக்கங்கள் செய்து காட்டப்பட்டன. மேலும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு மாணவிகள் விளக்கம் அளித்தனர். பயிற்சியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**<u>"விலையில்லா கால்நடைகள் திட்டத்தால் ஏழைகளின் குடும்ப வருமானம் உயர்ந்துள்ளது'</u>**

தமிழக அரசின் விலையில்லா கால்நடைகள் வழங்கும் திட்டத்தால் ஏழைகளின் குடும்ப வருமானம் உயர்ந்துள்ளது என்றார் மீன்வளத் துறை அமைச்சர் கே.ஏ. ஜெயபால். நாகை மாவட்டம், திருமருகல் ஒன்றியம், விற்குடி ஊராட்சியில் சனிக்கிழமை நடைபெற்ற, விலையில்லா கால்நடைகள் வழங்கும் விழாவில் அவர் பேசியது: இரண்டாம் பசுமை புரட்சிக்கு வித்திடும் வகையில் விலையில்லா கால்நடைகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தும் தமிழக அரசு, அந்தக் கால்நடைகளின் மருத்துவப் பராமரிப்புக்கும் நடவடிக்கை எடுத்து வருகிறது. விதவைகள், ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப் பட்டவர்களுக்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்தப்படும் இத்திட்டத்தால், கிராமப்புற ஏழைகளின் பொருளாதாரம் உயர்ந்துள்ளது என்றார் அமைச்சர் கே.ஏ. ஜெயபால். நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தலைமை வகித்துப் பேசுகையில், மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 1,950 பயனாளிகளுக்கு விலையில்லா கறவைப் பசுக்களும், 13,690 குடும்பங்களுக்குத் தலா 4

வெள்ளாடுகள் வீதம் 54,706 வெள்ளாடுகளும் வழங்கப்பட்டுள்ளன என்றார். இதைத்தொடர்ந்து, 50 பயனாளிகளுக்கு விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டன. முன்னதாக, விற்குடி ஊராட்சியில் சட்டப்பேரவை உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதி மூலம் ரூ. 7 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட நியாயவிலைக் கடை கட்டடத்தை அமைச்சர் திறந்து வைத்தார். நாகை மக்களவை உறுப்பினர் டாக்டர் கே. கோபால், மாநில கூட்டுறவு வங்கித் துணைத் தலைவர் எஸ். ஆசைமணி, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ரா. ராஜசேகரன், வருவாய்க் கோட்டாட்சியர் அ. சிவப்பிரியா, ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் ஆர். ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## <u>செப்.1 முதல் கால்நடைகளுக்கு கோமாரி நோய் சொட்டு மருந்து முகாம்</u>

செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு சொட்டு மருந்து அளிக்கும் முகாம் நடைபெறவிருக்கிறது என்று கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டி.பி.ஜெயசந்திரா தெரிவித்தார். இது குறித்து பெங்களூருவில் திங்கள்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது: கால்நடைகள் கோமாரி நோயால் பாதிக்கப்படுவதைத் தடுக்க இருக்கும் ஒரேவழி சொட்டு மருத்து வழங்குவதுதான். எனவே, செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் கால்நடைகளுக்கு மாநிலம் தழுவிய சொட்டு மருந்து முகாம் நடைபெறுகிறது. 20 நாள்களுக்கு இந்த சொட்டு மருந்து முகாம் இடம்பெறும். இந்த முகாம் 7-ஆம் கட்டமாக நடத்தப்படுகிறது. கடந்தாண்டு நடைபெற்ற முகாமில் 1.19 கோடி கால்நடைகளுக்கு சொட்டு மருந்து புகட்டப்பட்டது. இது மொத்த கால்நடைகளில் 96 சதமாகும். இந்த முறை 100 சத கால்நடைகளுக்கு சொட்டு மருந்து வழங்கத் திட்டமிட்டுள்ளோம். கடந்தாண்டு 50 ஆயிரம் கால்நடைகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டிருந்தன. இதில், 14 ஆயிரம் கால்நடைகள் இறந்து போயின. இறந்து போன கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு தலா ரூ.25 ஆயிரம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. தற்போது நடத்தப்படும் சொட்டு மருந்து முகாமிற்கு மத்திய அரசின் சார்பில், ரூ.25 கோடி முதல் ரூ.30 கோடி வரை செலவிடப்படும். கோமாரி நோயால் பாதிக்கப்பட்டுள்ள கால்நடைகளை கண்டறிவதற்கு கோட்ட அளவில் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 10 இடங்களில் கால்நடைகள்

கோமாரி நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. எனவே, கோமாரி நோயைத் தடுக்க சொட்டு மருந்து முகாம் நடத்தப்படுகிறது. இதில், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டும் என்றார் அவர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

**ஆரணியில், உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 313 பயனாளிகளுக்கு ரூ.27 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் வழங்கினார்**

ஆரணியில் நடந்த விழாவில் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 313 பயனாளிகளுக்கு ரூ.27 லட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் வழங்கினார்.

ரூ.27 லட்சம் நலத்திட்ட உதவி

ஆரணி தாலுகா பகுதியில் உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட வருவாய் அலுவலர் சா.பழனி தலைமையில் நடைபெற்றது. செஞ்சி வி.ஏழுமலை எம்.பி. முன்னிலை வகித்தார். செய்யாறு வருவாய் கோட்டாட்சியர் எஸ்.சாந்தா வரவேற்றார். விழாவில் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் கலந்து கொண்டு உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கல்வி உதவி தொகையாக 123 பேருக்கு ரூ.2 லட்சத்து 49 ஆயிரம், திருமண உதவி தொகை 134 பேருக்கு ரூ.12 லட்சத்து 26ஆயிரம், இயற்கை மரண நிவாரண உதவி தொகை 50 பேருக்கு ரூ.6 லட்சத்து 25 ஆயிரம், விபத்து நிவாரண உதவி தொகை 6 பேருக்கு ரூ.6 லட்சத்து 15 ஆயிரம் ஆக மொத்தம் 313 பேருக்கு ரூ.27 லட்சத்து 15 ஆயிரம் உதவி தொகைகளை வழங்கினார்.

முதன்மை மாநிலமாக... நிகழ்ச்சியில் அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் பேசுகையில், ‘‘உழவர் பாதுகாப்பு திட்டத்தில் 34 வகையான உதவிகள் வழங்கு வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த 3 ஆண்டுகளில் 1 லட்சத்து 2 ஆயிரம் பேர்களுக்கு ரூ.450 கோடி வரையிலான நலத்திட்டங்கள் வழங்கப் பட்டுள்ளன. இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக தமிழகம் சிறந்து விளங்கிட 20 மணி நேரம் மக்களுக்காக தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா உழைத்து வருகிறார் என்று தெரிவித்தார். விழாவில் ஆரணி தாசில்தார் துரைமணிமேகலை, இடர்பாடு தாசில்தார் டி.பாரி, மாவட்ட பேரவை செயலாளர் சேவூர் எஸ்.ராமச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் டி.கருணாகரன், ரமணி நீலமேகம், நகரமன்ற தலைவர் க.ஆனந்தகுமாரி, ஆரணி ஒன்றியக்குழு தலைவர் சாந்திசேகர், ஊராட்சி மன்ற தலைவர்கள் கூட்டமைப்பு தலைவர் கே.எஸ்.கிருஷ்ணன், ஆரணி நகர எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் ஆ.பெ.வெங்கடேசன் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், அலுவலர்கள், அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். முடிவில் தனித்துணை ஆட்சியர் வி.ஜோதி நன்றி கூறினார்.

## விவசாயிகளுக்கு சலுகை விலையில் எண்ணெய் வித்துகள்

திருத்தணி : வேர்க்கடலை பயிரிடும் விவசாயிகளுக்கு, மானிய விலையில் வித்துகள், உயிர் உரங்களை வேளாண் துறை வழங்குகிறது.திருத்தணி ஒன்றியத்தில், வேர்க்கடலை பயிரிடும் விவசாயிகளுக்கு, வேளாண் துறை சார்பில் சலுகை விலையில் வித்துகள் மற்றும் 50 சதவீதம் மானியத்துடன் உயிர் உரங்கள் மற்றும் ஜிப்சம் வழங்கப்படுகிறது.இதுகுறித்து, திருத்தணி வேளாண் உதவி இயக்குனர் பிரசாத் கூறியதாவது: தேசிய வேளாண்மை பெருக்குத் திட்டத்தின் கீழ், எண்ணெய் வித்துகள் மானியத்துடன் வழங்குகிறது. அதாவது, ஒரு கிலோ வேர்க்கடலை, 60.45 ரூபாயக்கு வழங்கப்படுகிறது. இதில், விவசாயிக்கு ஒரு கிலோவுக்கு, 12 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. அதே போல், உயிர் உரங்கள் மற்றும் ஜிப்சம் வாங்கும் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் திருத்தணி மற்றும்

கே.ஜி.கண்டிகை ஆகிய பகுதிகளில் உள்ள வேளாண்மை விரிவாக்க அலுவலகத்தில், காலை, 9:30 மணி முதல் மாலை 5:00 மணி வரை, நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம். இதுதவிர, விவசாயிகள் தண்ணீர் கொண்டு செல்வதற்கு குழாய் அமைப்பதற்கு, 600 மீட்டருக்கு, 15 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இந்த சலுகைகள் பெறுவதற்கு எவ்வித ஆவணமும் தேவையில்லை.இவ்வாறு அவர் கூறினார்.

## வேளாண் விளை பொருட்கள் ரூ.9.75 லட்சத்துக்கு விற்பனை

கோபிசெட்டிபாளையம்: கோபி, வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், 9.75 லட்சம் ரூபாயில் வாழைதார்கள் மற்றும் தேங்காய்கள், ஏலத்தில் விற்பனையானது. கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், புதன் மற்றும் சனிக்கிழமைகளில், வேளாண் விளை பொருட்கள் ஏலம் நடக்கிறது. அதன்படி, கோபியில் நடந்த ஏலத்தில், மொத்தம், 6,500 வாழைத்தார் வரத்தாகியது. கதளி ஒரு கிலோ, 47.50 ரூபாய்க்கும், நேந்திரம், 32 ரூபாய்க்கும் விலைபோனது. செவ்வாழை தார் தார், 875 ரூபாய்க்கும், ரொபஸ்டா, 400 ரூபாய், ரஸ்த்தாளி, 500 ரூபாய், மொந்தன், 400 ரூபாய், பூவன், 550 ரூபாய், பச்சைநாடான், 250 ரூபாய்க்கு விலைபோனது. விற்பனைக்கு வந்த அனைத்து தார்களும் மொத்தம், 8.75 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. இந்த தார்களை, திருப்பூர் மற்றும் ஊத்துக்குளி பகுதியை சேர்ந்த வியாபாரிகள் வாங்கிச் சென்றனர். இதேபோல், தேங்காய்களுக்கான ஏலமும் நடந்தது. மொத்தம், பத்தாயிரம் தேங்காய்கள் வரத்தானது. 8.50 முதல், 16 ரூபாய் வரை விலை போனது. அனைத்து தேங்காய்களும், ஒரு லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## சம்பா சாகுபடிக்கு அடி உரங்கள் வந்தாச்சு : டெல்டா மாவட்டங்களுக்கு பிரித்து அனுப்பும் பணி தீவிரம்

திருச்சி: திருச்சி உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில், சம்பா சாகுபடிக்காக, 2,650 டன் அடி உரங்கள், ஒடிஸா மாநிலத்தில் இருந்து ரயில் மூலம், நேற்று அதிகாலை திருச்சி வந்தது. அந்த உர மூட்டைகளை, லாரிகள் மூலம் டெல்டா மாவட்டங்களுக்கு பிரித்து அனுப்பும் பணி, தீவிரமாக நடந்து வருகிறது.

கர்நாடகாக மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கன மழையால், கபினி, கே.ஆர்.எஸ்., உள்ளிட்ட அணைகள் நிரம்பியது. இதையடுத்து, கர்நாடகா அணையில் இருந்து, தமிழகத்துக்கு முதல் கட்டமாக, ஒரு லட்சம் கன அடி நீர் திறந்து விடப்பட் டது. இதனால், மேட்டூர் அணையின் நீர்மட்டம், 100 அடியை எட்டியது. கடந்த, 10ம் தேதி சம்பா சாகுபடிக்காக, மேட்டூர் அணையில் இருந்து முதலில், 9,000 கன அடி தண்ணீரும், தற்போது, விநாடிக்கு, 21 ஆயிரத்து, 600 கன அடி நீரும் காவிரியாற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம், கல்லணையில் இருந்தும், சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, டெல்டா மாவட்ட விவசாயிகள், நெல் சாகுபடி பணியை துவக்கியுள்ளனர். இதற்கு, அடி உரமாக ஒடிஸா மாநிலத்தில் உள்ள இப்ஃகோ உர தயாரிப்பு நிறுனத்தில் இருந்து, டி.ஏ.பி., உரம், 850 டன்னும், 20-20 உரங்கள், 1,800 டன் உள்பட மொத்தமாக, 2,650 டன் உரம், நேற்று அதிகாலை, ரயில் மூலம் திருச்சி வந்தது. பிறகு, திருச்சி ரயில்வே குட்ஷெட்டில் இருந்து புதுக்கோட்டை, பெரம்பலூர், அரியலூர், கரூர், தஞ்சை மாவட்டங்கள் மற்றும் திருச்சி மாவட்ட பகுதிகளுக்கு லாரிகள் மூலம், உர மூடைகளை பிரித்து அனுப்பும் பணி விறுவிறுப்பாக துவங்கியது. இது குறித்து, இப்ஃகோ நிறுவன முதன்மை மண்டல மேலாளர் சுப்பிரமணியம் கூறியதாவது: மேட்டூர் அணையில் இருந்து, சம்பா சாகுபடிக்கு, டெல்டா பாசன பகுதிகளில் விவசாயிகள், நெல் நாற்று நடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு, அடி உரம் தேவைப்படும். இதற்காக, முதல் கட்டமாக, 2,600 டன் அடி உரங்கள் வந்துள்ளது. 200 கூட்டுறவு சங்கங்கள் மூலம், இந்த உரங்கள், விவசாயிகளுக்கு மான்ய விலையில் விநியோகம் செய்யப்படும். விலை, உரத்தில் உள்ள சத்துக்கள் உள்ளிட்ட விபரங்கள் மூடைகளில் தனித்தனியே அச்சிடப்பட்டுள்ளது. மூடையில் உள்ள விலையை விட கூடுதலாக கேட்டால், அதிகாரிகளிடம் புகார் செய்யலாம். எக்காரணம் கொண்டும், தமிழகத்தில் உரத்தட்டுபாடு இருக்கக் கூடாது, என அரசு விழிப்போடு உள்ளது. அடுத்த கட்டமாக இரண்டொரு நாளில், மீண்டும் உர மூடைகள் வரவுள்ளது. இதனால், டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடியின் போது, உரத்தட்டுபாடு ஏற்பட வாய்ப்பில்லை. திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கு, தனியாக ரயில் மூலம் அடி உரங்கள் அனுப்பபட்டுள்ளது, என்றார். கூட்டுறவு சங்க மண்டல

துணைப்பதிவாளர் சித்ரா, இப்ஃகோ நிறுவன கள அலுவலர் சுரேஷ் உள்பட அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

**<u>கால்நடை பராமரிப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி</u>**

தேனி : உத்தமபாளையம் ராயப்பன்பட்டி கிராமத்தில், குள்ளப்புரம் வேளாண்மை தொழில்நுட்ப கல்லூரி இறுதியாண்டு மாணவிகள் அனராஜ், மணிமாலா, ஆட்லின், தனலெட்சுமி, பிரியங்கா, அறிவுமதி, காவியா, வினிதா மற்றும் கிரீஷ்மா மது ஆகியோர் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் கால்நடை பராமரிப்பு பற்றி டாக்டர் ஜெகன்நாதன் தலைமையில் 30 விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். இதில் பால் கறப்பதற்கு முன் மாட்டின் மடியை நன்றாக கேஎம்என்ஓ 4 கரைசல் மூலம் சுத்தம் செய்வதன் மூலம் மாடுகளை மடி நோயிலிருந்து பாதுகாக்கலாம், என செய்முறை பயிற்சி அளித்தனர். இதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் ராஜ்மனோகரன், முருகேசன், சூசைமணி செய்திருந்தனர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>தமிழகத்தில் இன்றும் மழை பெய்யும்</u>**

சென்னை : தென் மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதை அண்டை மாநிலங்களில் கன மழை பெய்து வருகிறது. அதன் தொடர்ச்சி யாக தமிழகத்தின் வட மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது.சென்னை விமான நிலையம், அண்ணா பல்கலைக் கழகம், தரமணி, கொளப்பாக்கம் ஆகிய இடங்களில் 80 மிமீ மழை பெய்துள்ளது. பூந்தமல்லியில் 60 மிமீ மழையும், செம்பரம்பாக்கம் 30 மிமீ மழையும், மேடவாக்கம், புழல், எண்ணூர், சோழவரம் ஆகிய இடங்களில் 10 மிமீ மழை பெய்துள்ளது.இத தவிர திருவொற்றியூர், கொரட்டூர், வில்லிவாக்கம், அம்பத்தூர், சைதாப்பேட்டை,

அடையாறு, பரங்கிமலை, ஆலந்தூர், மாதவரம், தாம்பரம், வேளச்சேரி, புரசைவாக் கம், மயிலாப்பூர் உள்பட சென்னையின் அனைத்து பகுதிகளிலும் விடிய விடிய மழை கொட்டித் தீர்த்தது. பெரும்பாலான சாலைகளில் மழை நீர் குளம்போல தேங்கியதுடன், வெளியேற வழியில்லாமல் சாலைகளில் தேங்கியது. இதனால் நேற்று காலையில் சென்னையின் அனைத்து பகுதி களிலும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அலுவலகம், பள்ளி செல்வோம் மிகவும் சிரமப்பட்டனர். நேற்று காலை 11 மணிக்கு பிறகே போக்குவரத்து சீரானது. இருப்பினும், தாழ்வான இடங்களில் இன்னும் மழை நீர் வெளியேறாமல் தேங்கியுள்ளது.இந்நிலையில், அரபிக் கடலில் நிலை கொண்டு இருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை வட கிழக்கு திசையில் நகர்ந்து கர்நாடகாவை ஒட்டிய கடலோரப் பகுதியில் நிலை கொண்டுள்ளது. இதனால் இன்று கர்நாடகா, தெலங்கானா, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் கனமழை பெய்யும். தமிழகத்தில் வட மாவட்டங்களில் இன்றும் காலை மற்றும் மாலை நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னையிலும் காலை மாலை நேரங்களில் இடியுடன் மழை பெய்யும்.

## <u>வெண்பன்றி வளர்ப்பு பயிற்சி</u>

வேலூர், : வேலூர் கலெக்டர் அலுவலகத்தில் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மையத்தில் வெண்பன்றி வளர்ப்பு பற்றி கால்நடை பல்கலைக்கழக பேராசிரியர் சரஸ்வதி பயிற்சி அளித்தார். வெண்பன்றி வளர்ப் பின் நன்மைகள், பன்றி இனங்கள், இனப்பெருக்கம், தீவன மேலாண்மை, நோய்கள் தடுப்பு முறைகள் குறித்துபயிற்சிஅளிக்கப்பட்டது.

## <u>கொள்முதல் விலை விவகாரம் பால் விலையை மீண்டும் உயர்த்த முடிவு</u>

சென்னை : தமிழகத்தில் ஓரிரு நாட்களில் பால் விலை உயர்த்தப்படும் என்று தெரிகிறது.பால் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் பால் கொள்முதல் செய்யப் பட்டு, ஆவின் நிர்வாகம் மூலம் பொதுமக்களுக்கு பால் விநியோகிக்கப் பட்டு

வருகிறது. தனியார் பால் விலையை ஒப்பிடும் போது ஆவின் பால் சுமார் 40 சதவீதம் அளவுக்கு விற்பனை குறைவாக உள்ளது. இதனால், பால் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு பால் சப்ளை செய்யும், பால் உற்பத்தியாளர்கள் பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கவேண்டும் என்று தொடர்ந்து போராடி வருகிறார்கள்.கடந்த சில மாதங்களு க்கு முன் பால்கூட்டுறவு ஒன்றியங்களுக்கு பால் சப்ளை செய்து வந்த பால் உற்பத்தியாளர்களில் பெரும்பான்மை யானவர்கள், தனியார் கொள்முதல் நிலையங்களுக்கு சப்ளை செய்ய தொடங்கி விட்டனர். இதனால், ஆவின் நிர்வாகம் பால் பவுடர்களை பாலாக்கி, தட்டுப்பாடின்றி பால் விநியோகம் செய்தது. இந்நிலை நீடித்தால் பிரச்னை ஏற்படும் என்பதை அறிந்த ஆளுங்கட்சி தலைமை, பால் கூட்டுறவு ஒன்றியங்களின் தலைவர்களை முடுக்கி விட்டு, பால் கூட்டுறவு ஒன்றியங்களின் உறுப்பினர்கள் தனியார் கொள்முதல் நிலையங்களுக்கு பால் சப்ளை செய்வதை தடுத்து நிறுத்தி பால் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்க வைத்தது.பால் உற்பத்தியாளர்கள் பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்று தொடர்ந்து போராடி வருகின்றனர். காரணம், கால்நடைகளின் தீவனங்களின் விலை உயர்வு, பால் கொள்முதல் விலையை குறைவாக உள்ளது. எனவே, பால் உற்பத்தி யாளர்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளது. மேலும், மக்களை பாதிக்காத வகையில் பால் கொள்முதல் விலையை உயர்த்தவும் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் தலைமையில், அமைச்சர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொள்ளும் ஆலோசனை கூட்டம் நேற்று நடப்பதாக இருந்தது. திடீர் என்று இந்த ஆலோசனை கூட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது. மீண்டும் ஓரிரு தினங்களில் இந்த ஆலோசனை கூட்டம் நடக்க இருப்பதாக ஆவின் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

## முருங்கைக்காய் இலவசமாக விநியோகம்

போச்சம்பள்ளி: கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி பகுதியில் வயல் வரப்புகளிலும், தோட்டங்களிலும் முருங்கை மரங்களை சாகுபடி செய்துள்ளனர்.

இதேபோல், வீட்டின் அருகிலும் முருங்கை மரங்களை வளர்த்து வருகின்றனர். தற்போது வரலாறு காணாத அளவிற்கு முருங்கை விளைச்சல் அமோகமாக உள்ளது. ஒவ்வொரு மரத்திலும் சுமார் 500க்கும் மேற்பட்ட காய்கள் காய்த்து கொத்து கொத்தாக தொங்குகிறது. இதை பறித்து விவசாயிகள் மார்க்கெட்டிற்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து வருகின்றனர். விளைச்சல் அமோகமாக உள்ளதால், ஒரு காய் 50 பைசாவிற்கு கூட வாங்க ஆள் இல்லை. இதனால், வியாபாரிகள் முருங்கைக்காயை வாங்க மறுக்கின்றனர். இதனால், மார்க்கெட்டிற்கு கொண்டு வந்த முருங்கைக்காய்களை நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் இலவசமாக கொடுத்து விட்டுச் சென்றனர். கடந்த சில நாட்களில் ஒரு முருங்கைக்காய் 10 வரை விற்பனை செய்யப்பட்டது.

**ராகி சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது எப்படி? வேளாண் அதிகாரி ஆலோசனை**

தேன்கனிக்கோட்டை, : ராகி சாகுபடியில் அதிக மகசூல் பெறும் வழிமுறை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து கெலமங்கலம் வட்டார வேளா ண்மை உதவி இயக்குநர் ராமலிங்கம் விடுத்துள்ள அறிக்கை: தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம் வட்டாரத்தில் தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது. இதனை பயன்படுத்தி விவசாயிகள் ராகி சாகுபடி பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இதற்கு தேவையான ஜியுபி-28, மற் றும் எல்-5ரக விதைகள் தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம், ராயக்கோட்டை ஆகிய வேளா ண்மை விரி வாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு விதை கிராம திட்டத்தின் கீழ் 50 சதவிகிதம் மானியத்தில் ராகி விதைகள் வினியோகிக்கப்பட்டு வருகிறது. ராகி விதைப்பிற்கு முன் உயிர் உரங்கள் கலந்து விதை நேர்த்தி செய்து விதைத்திட கேட்டுக் கொள்ளப் படுகிறது. மேலும், ஒரு எக்டருக்கு 12 பாக்கெட் அசோஸ்பைரில்லம் மற்றும் சிறு தானிய நூண்ணூட்டம், 12.5 கிலோ கடைசி உழவின் போது நிலத்தில் தூவி பின் னர் விதைக்கவும். இதன் மூலம் பயிர்களில் நல்ல மகசூலி னை பெறலாம்.இவ்வாறு கெலமங்லம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராமலிங்கம்

தெரிவித்துள்ளார்.

**திருச்சியில் 10.60 மிமீ மழை பதிவானது**

திருச்சி,: திருச்சி மாவட்டத்தில் நேற்று அதிகாலை வரை பெய்த மழையில் அதிகபட்சமாக ஏர்போர்ட்டில் 10.60மி.மீ பதிவாகியுள்ளது. குறைந்த பட்சமாக கள்ளிக் குடியில் 2.10 மி.மீ பதிவாகியுள்ளது. இதில் மணப்பாறை, முசிறி, தா.பேட்டை, துறையூர், மருங்காபுரி, பொன்னணியாறுடேம், நந்தியார் தலைப்பு, வாத்தலை அணைக்கட்டு, சமயபுரம், சிறுகுடி, புலிவலம், குப்பம்பட்டி, கோவில்பட்டி, மேலணைக்கட்டு ஆகிய இடங்களில் மழை பெய்யவில்லை. திருச்சி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் காலை 8மணி முதல் நேற்று காலை 8மணி வரை பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்): லால்குடி 4, புள்ளம்பாடி 2.40, திருச்சி ஏர்போர்ட் 10.60, திருச்சி டவுன் 6.40, நவலூர் குட்டப்பட்டு 7, கல்லக்குடி 2.10, தேவிமங்கலம் 6.60, பொன்மலை 8.40, திருச்சிஜங்சன்3.40,துவாக்குடி8.

**சம்பா சாகுபடி முனைப்பு இயக்க முகாம்**

தொட்டியம்,: தொட்டியம் வட்டார வேளாண்மைத்துறை சார்பில் திருநாராயணபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கட்டிடத்தில் சம்பா சாகுபடி முனைப்பு இயக்க முகாம் நடைபெற்றது. தொடக்க வேளாண் கூட்டு றவு வங்கி தலைவர் சங்கர் துவக்கி வைத்தார். அரச லூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் முருகானந்தம் மற்றும் கூட்டுறவு கடன் சங்க துணை செய லாளர் சிங்காரம், தங்கவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி யில் செயல்படும் அக்ரி கிளினிக் பொறுப்பாளர் பாலமுருகன், மண் ஆய்வு, மண் பரிசோதனை, அடிப்படையில் உரமிடுதல் அதன் அவசியம் குறித்து விளக்கினார்.தொட்டியம் வேளா ண்மை அலுவலர் வேல்முருகன், உதவி வேளாண்மை அலுவலர் மாசிலாமணி ஆகியோர் சாகுபடியில் கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள் விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காட்டினர்.

## தொட்டியம் பகுதியில் களைக் கட்டுப்பாடு சிறப்பு முகாம்

தொட்டியம்,: தொட்டியம் தாலுக்கா திருஈங்கோய்மலை ஊராட்சிகுட்பட்ட முள்ளிப்பாடி கிராமத்தில் பார்த்தீனீயம் களை ச்செடி கட்டுப்பாடு சிறப்பு முகாம் நடைபெற்றது. இதில் விவசாயிகளுக்கு நேரடி செயல் விளக்கமாக 20 சதம் சமையல் உப்புக் கரைசல் அதாவது ஒரு கிலோ சமையல் உப்பினை 20 லிட்டர் தண்ணீரில் கரைத்து அதனுடன் 2மில்லி சோப்பு திரவம் கலந்து பார்த்தீனீயம் களைச் செடி யில் நன்கு நனையும்படி தெளிக்கப்பட்டது. திருஈங்கோய் மலை மற்றும் முள்ளிப் பாடி சுற்று வட்டார விவசாயிகள் கலந்து கொண் டனர். தொட்டியம் வட்டா ரம் வேளாண்மை உதவி இயக்குனர் ராஜா மணி கூறுகையில் பார்த்தீனீயம் செடி அனைத்து தட்ப வெப்ப சூழ்நிலைகளிலும் வளரக்கூடியது. இது ஒரு நச்சுத்தன்மை கொண்ட செடியாகும். இதன் நச்சுத்தன்மையால் மனிதனுக்கு தோல் அரிப்பு, கொப்புளங்கள், தேமல், ஆஸ்துமா போன்ற நோய் கள் ஏற்படுகி றது. மேலும் கால்நடைகளுக்கு தோல் நோயை ஏற்படுத்துகிறது என்றார். வேளாண்மை அலுவலர் வேல்முருகன் கூறுகையில், பார்த்தீனீயத் தின் விதைகள் காற்றின் மூலம் பரவக்கூடியது. எனவே இச்செடியை பூ பூப்பதற்கு முன்னரே கட்டுப்படுத்த வேண்டும் அல் லது வேரோடு பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும் என் றார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் மாசிலாமணி மற்றும் ஆசைத்தம்பி ஆகியோர் செய்திருந்தனர்.

## திருச்செந்துறை வணிக வளாகத்தில் நாளை வாழைத்தார் பொது ஏலம்

திருச்சி,: திருச்செந்துறை ஒருங்கிணைந்த வணிக வளாகத்தில் நாளை வாழைத்தார் பொது ஏலம் விடப்படுவதால் விவசாயிகள், வியாபாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.திருச்சி வேளாண் விற்பனைகுழு சார்பில் ஸ்ரீரங்கம் திருச்செந்துறையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் நாளை (புதன்) காலை 11மணி முதல் 1மணி வரை வாழைத்தார்கள் பொது ஏலம் நடை பெற உள்ளது. எனவே அந்தநல்லூர்,மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி,தொட்டியம் ஆகிய

வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் மற்றும் டெல்டா மாவட்ட விவசாயிகளும் அறுவடை செய்துள்ள வாழைத்தார்களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்திற்கு கொண்டு வந்து பொது ஏலத்தில் கலந்து கொள்ளலாம். என திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை துணை இயக்குநர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

## கோவை விதைச்சான்று இணை இயக்குனர் ஆய்வு

சிவகங்கை, : சிவ கங்கை மாவட்டத்தில் கோவை விதைச்சான்று இணை இயக்குநர் பழனிச்சாமி விதைச்சான்று பணிகளை ஆய்வு செய்தார். கல்லல் அருகே கூமாச்சிப்பட்டி விதைப்பண்ணை யில் பயன்படுத்திய விதை, பயிர் வளர்ந்துள்ள நிலை குறித்து கோவை விதைச்சான்று இணை இயக்குனர் ஆய்வு செய் தார். மேலும், சிவகங்கை விதை சுத்திகரிப்பு நிலையத் தில் விதை சுத்திகரிப்பு நிலைய உரிமம், பதிவேடுகள், களவிதை குவியல், சுத்திகரிப்பு செய்யப்பட்ட விதைக்குவியல், சான்றட்டை பொருத்திய விதைக்குவியல் மற்றும் இருப்பு உள்ளிட்டவற்றை ஆய்வு செய் தார். அங்குள்ள பரிசோ தனை நிலையத்தில் விதைகளின் முளைப்புத்திறன், ஈரப்பதம், சுத்தத்தன்மை உள்ளிட்டவற்றை ஆய்வு செய்தார். பல்வேறு இடங் களை பார்வையிட்ட அவர் நடப்பு ஆண்டில் சிவகங்கை மாவட்டத்தில் விதைச்சான்று துறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை முழுமையாக அடைந்திடவும், நல்ல தர மான சான்று பெற்ற விதை களை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கிட, விதைச்சான்று மற்றும் விதை சுத்திகரிப்பு நிலைய அலுவலர்களுக்கு' அறிவுறுத்தினார்.

## 84 பயனாளிக்கு இலவச ஆடுகள்

வாலாஜாபாத், : வாலாஜாபாத் ஒன்றியம் தென்னேரி, மற்றும் பூசிவாக்கம் ஊராட்சிகளில் தமிழக அரசின் இலவச ஆடுகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. விழாவிற்கு ஒன்றிய குழு தலைவர் வரதராஜுலு தலைமை தாங்கினார். விழாவில், உத்தரமேரூர் எம்எல்ஏ வாலாஜாபாத் கணேசன் கலந்து

கொண்டு, தென்னேரி ஊராட்சியில் 50 பயனாளிகளுக்கும் பூசிவாக்கம் ஊராட்சியில் 34 பயனாளிகளுக்கும் இலவச ஆடுகளை வழங்கி உரை யாற்றினார். இதில் கால்நடை மருத்துவர்கள் தேவி, ஜெய்ஆனந்த், மாவட்ட கவுன்சிலர் பிரபாகரன், ஒன்றிய கவுன்சிலர்கள் ரமேஷ், சத்தியராஜ், ஜெய்சங்கர், பிரேமா கருணாகரன், ஊராட்சிமன்ற தலைவர்கள் விநோபாஜி, வனிதா மோகன்தாஸ், வாலாஜாபாத் பேரூராட்சி தலைவர் நாகராஜன் உட்பட பலர்கலந்துகொண்டனர்.

**<u>கோவை விதைச்சான்று இணை இயக்குனர் ஆய்வு</u>**

சிவகங்கை, : சிவ கங்கை மாவட்டத்தில் கோவை விதைச்சான்று இணை இயக்குநர் பழனிச்சாமி விதைச்சான்று பணிகளை ஆய்வு செய்தார். கல்லல் அருகே கூமாச்சிப்பட்டி விதைப்பண்ணையில் பயன்படுத்திய விதை, பயிர் வளர்ந்துள்ள நிலை குறித்து கோவை விதைச்சான்று இணை இயக்குனர் ஆய்வு செய் தார். மேலும், சிவகங்கை விதை சுத்திகரிப்பு நிலையத் தில் விதை சுத்திகரிப்பு நிலைய உரிமம், பதிவேடுகள், களவிதை குவியல், சுத்திகரிப்பு செய்யப்பட்ட விதைக்குவியல், சான்றட்டை பொருத்திய விதைக்குவியல் மற்றும் இருப்பு உள்ளிட்டவற்றை ஆய்வு செய் தார். அங்குள்ள பரிசோ தனை நிலையத்தில் விதை களின் முளைப்புத்திறன், ஈரப்பதம், சுத்தத்தன்மை உள்ளிட்டவற்றை ஆய்வு செய்தார். பல்வேறு இடங் களை பார்வையிட்ட அவர் நடப்பு ஆண்டில் சிவ கங்கை மாவட்டத்தில் விதைச்சான்று துறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை முழுமையாக அடைந்திடவும், நல்ல தர மான சான்று பெற்ற விதை களை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கிட, விதைச்சான்று மற்றும் விதை சுத்திகரிப்பு நிலைய அலுவலர்களுக்கு' அறிவுறுத்தினார்.

**<u>கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் சிறந்த முறையில் கன்றுகளை பராமரித்த 6 பேருக்கு பரிசு</u>**

இளம்பிள்ளை, : சிறந்த முறையில் கன்று களை பராமரித்த 6 பேருக்கு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாமில் பரிசு வழங்கி பாராட்டு

தெரிவிக்கப்பட்டது. இளம்பிள்ளை அருகே கல்பாரப்பட்டி ஊத்துகிணத்து வளவில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடைபெற்றது. இம்முகா மில் கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம், செயற்கை கருவூட்டல், சினை ஆய்வு, சினை பரிசோதனை மற்றும் கோழிகளுக்கு தடுப்பூசி போடப்பட்டன. மேலும், 1070 ஆடு, மாடு, கோழிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டன. சிறந்த முறையில் கன்று களை காதுகாத்து வந்த உரிமையாளர்கள் 6 பேருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. முகாமில் வீரபாண்டி கால் நடை மருத்துவர் சாந்தி, உதவி மருத்துவர் முகமது, மருத்துவர்கள் செல்வராஜ், ரவிக்குமார், ஒன்றிய கவுன்சிலர் கந்தசாமி, ஊத்துகிணத்துவளவு வார்டு உறுப்பினர் ராமச்சந்திரன் உள்ளிட்டோர்பங்கேற்றனர்.

**<u>தண்ணீர் திறப்பால் சாகுபடி பணி தீவிரம் போலி உரங்கள், பூச்சி மருந்து மாவட்டத்தில் தாராள விற்பனை</u>**

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் போலி உரம் மற்றும் பூச்சி மருந்துகள் தாராளமாக விற்பனை செய்யப்பட்டு வருவதை தடுக்க வேளாண் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். ஈரோடு மாவட்ட விவசாயிகளுக்கான குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சதீஷ் தலைமையில் நடைபெற்றது.கூட்டத்தில் விவசாயிகள் தரப்பில் பேசியதாவது: கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்க உத்தரவிட்ட தமிழக அரசுக்கு விவசாயிகள் சார்பில் நன்றியைதெரிவித்துக்கொள்கிறோம். பாசன பகுதிகளில் நடவு பணி முடிவடையும் வரை வாய்க்காலில் முழு கொள்ளளவில் தண்ணீர் திறக்க வேண்டும். நடப்பு ஆண்டில் கீழ்பவானியில் நெல் பயிரிடும் பரப்பளவு 80 ஆயிரம் ஏக்கர் வரை எதிர்பார்க்கப்படுவதால் தேவையான அளவு இடுபொருட்களை இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதே போல நெல் நடவுக்கான இயந்திரங்களை தேவையான அளவு வேளாண்பொறியியல் துறையினர் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். கூட்டுறவு மற்றும் தேசியமாக்கப்பட்ட வங்கிகளில் பயிர்கடன் தாராளமாக வழங்க முன்வர வேண்டும். தற்போதுள்ள பயிர்காப்பீடு முறையில் மாற்றம் செய்ய அரசு

முன்வர வேண்டும். மாவட்டத்தில் உள்ள குளம், குட்டைகளை தூர்வார பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்துறையினர் முன்வர வேண்டும். பெரும்பள்ளம்அணைக்கட்டு பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். தண்ணீரை அதிகம் உறிஞ்சும் சீமைகருவேலை மரங்களை பாசனவாய்க்கால்அருகில் இருந்தால் அதை அகற்றி விட்டு வேறு பயனுள்ள மரங்களை நட நடவடிக்கை எடுக்க வேண்டும். நெல் விளைச்சலை அதிகரிக்க செய்யும் வகையில் வயல்வெளி பண்ணைகளை அமைக்க வேளாண்துறையினர் முன்வர வேண்டும். கோமாரி நோய் தடுப்பூசிகளை ஒவ்வொரு தோட்டமாக சென்று கால்நடைத்துறையினர் கால்நடைகளுக்கு போட வேண்டும். மாவட்டத்தில் உள்ள சந்தைகளில் கூடுதல் சுங்கவரி கட்டணம் வசூலிக்கப்பட்டு வருவதை முறைப்படுத்த வேண்டும். கரும்பு, நெல் உள்ளிட்ட அனைத்து விதமான விளைபொருட்களுக்கும்மத்திய அரசு அறிவித்துள்ள விலையை விட கூடுதலாக மாநில அரசு விலை நிர்ணயம் செய்யக்கூடாது என்ற மத்திய அரசின் சட்டமான விவசாயிகளுக்கு எதிரான நடவடிக்கையாகும். மத்திய அரசின் நடவடிக்கைக்கு விவசாயிகள் சார்பில் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் போலி உரங்கள், பூச்சி மருந்துகள் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கோபி அருகே பயிர் ஊக்கி மருந்து தெளிக்கப்பட்ட 2 ஏக்கர் நெற்பயிர்கள் காய்ந்து கருகி விட்டது. இதே போல கடந்த ஆண்டில் கவுந்தப்பாடியிலும், அதற்கு முன்பு டிஎன் பாளையத்திலும் இதே போல சம்பவங்கள் நடைபெற்றுள்ளது. ஆனால் இது வரை எந்த உர கம்பெனி மற்றும் பூச்சி மருந்து கம்பெனி மீதும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை. மாவட்டத்தில் தாராளமாக விற்பனை செய்யப்பட்டு வரும் போலி உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகளின் விற்பனை யை தடுக்க மாவட்ட நிர்வாகமும், வேளாண்துறையும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டம் முழுவதும் காலியாக உள்ள சர்வேயர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். தமிழக அரசு கொண்டு வந்துள்ள கிணறு மற்றும் ஆழ்குழாய்கள் கிணறுகள் வெட்டுவது தொடர்பான அவசர சட்டத்தை திரும்ப பெற வேண்டும். இந்த சட்டமானது

விவசாயிகளை வஞ்சிக்கின்ற செயலாகும். மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடைபெறும் லோக்அதாலத் மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கொடிவேரி அணை கட்டிய வாரிசுதாரர்களுக்கு ஜாதி சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஈரோடு மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள சாய, சலவை மற்றும் தோல் தொழிற்சாலை களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளால் நீர்நிலைகள் கடுமையாக பாதிக்கப் பட்டு வருவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியார் சர்க்கரை ஆலைகளில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகையை உடனடியாக பெற்றுத்தர மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் தரப்பில் பேசினர்.

**<u>தாராபுரத்தில் கோமாரி நோய் தடுப்பு விழிப்புணர்வு கூட்டம்</u>**

தாராபுரம், : தாராபுரத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கோமாரி நோய் விழிப்புணர்வு கூட்டம், கால்நடை பராமரிப்புத்துறை அலுவலகத்தில் நடைபெற்றது. வருவாய் கோட்டாட்சியர் திவாகர் தலைமை தாங்கினார். தாராபுரம் வட்டாட்சியர் ஆறுமுகம், காங்கயம் வட்டாட்சியர் தட்சணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி இயக்குநர் சந்திரசேகரன் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மருத்துவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை துணை இயக்குநர் சண்முகவேல் பேசியதாவது: தாராபுரம் மற்றும் காங்கயம் தாலுகாக்களில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக கால்நடை வளர்ப்பு இருந்து வருகிறது. தற்போதைய சூழ்நிலையில் கறவை மாடுகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்நிலையில், கால்நடைகள் நோய் பாதிப்புக்கு உள்ளானால் அல்லது இறந்து போனால் விவசாயிகளுக்கு மிகப்பெரிய இழப்பு ஏற்படும். மிகவும் கொடிய நோய் கோமாரி நோய். இந்த நோயால் பாதிக்கப் பட்ட கால்நடைகளுக்கு அதிக காய்ச்சல் இருக்கும். தீவனம் உட்கொள்ளாது. நடக்க முடியாமல் கால்களை நொண்டும். வாயிலிருந்து நுரை கலந்த உமிழ்நீர் கொட்டும். வாயின் ஈறுகள், நாக்கு, குளம்பு பகுதியில் புண்கள் ஏற்படும். கோமாரி நோய் தாக்கிய மாடுகளின் கன்றுகள் தாயிடம் பால் குடித்தால்

அதுவும் இறக்க நேரிடும். இந்த நோய் தாக்கிய கால்நடைகளை காப்பாற்றுவது மிகவும் கடினம். இந்த நோய் பரவாமல் தடுப்பதற்காக ஆண்டிற்கு இரண்டு முறை தடுப்பூசி போடப்படுகிறது. தாராபுரம் மற்றும் காங்கயம் வட்டத்தில், காங்கயத்தில் 21 ஆயிரத்து 973, வெள்ளகோவிலில் 17 ஆயிரத்து 105, தாராபுரத்தில் 27 ஆயிரத்து 791, மூலனூரில் 17 ஆயிரத்து 997, குண்டடத்தில் 33 ஆயிரத்து 19 என, மொத்தம் ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 885 கால்நடைகள் உள்ளது. செப்டம்பர் 1ம் தேதியிலிருந்து 21ம் தேதிக்குள் அனைத்து கால்நடை களுக்கும் தடுப்பூசி போட வேண்டும் என்பது நோக்கம். இதற்காக வருவாய்த் துறை, உள்ளாட்சித்துறை, ஊரக வளர்ச்சித்துறை ஆகியோருடன் கால்நடை பராமரப்புத்துறை இணைந்து, விழிப்புணர்வு பிரசார விளம்பரங்களை மேற் கொள்ளும். அந்தந்த பகுதியில் மருத்துவக்குழு முகாமிடுவதற்கு முன்தினம் விளம்பரங்கள் செய்யப்படும். தாராபுரம் கோட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் தடுப்பூசி போடுவதற்காக மொத்தம் 29 மருத்துவக்குழுகள் அமைக்கப் பட்டுள்ளது. அனைவரும் தவறாமல் தங்களது கால்நடைகளுக்கு தடுப்பூசி போட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

**<u>குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய செயல்பாடுகள் கலெக்டர் ஆய்வு</u>**

அன்னவாசல், : குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தினை கலெக்டர் மனோகரன் ஆய்வு செய்தார். குடுமியான்மலையில் இயங்கி வரும் உழவர் பயிற்சி நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட கலெக்டர் மனோகரனிடம் வேளாண் இணை இயக்குநர் ஷாஜ ஹான் விளக்கிக் கூறினார். பயிற்சி நிலையத்தில் அட்மா விரிவாக்கச் சீரமைப்புத் திட்டத்தின் மூலம் வாங்கப்பட்ட பயிற்சிசாதனங்களையும், விவசாயிகளுக்கான பல்வேறு தொழில்நுட்பங்கள் அடங்கிய குறும்படங்களின் தொகுப்புகளை யும் கலெக்டர் பார்வையிட்டார். மேலும் உழவர் பயிற்சி நிலையத்தில் உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கு வழங்கப்படும் தொழில்நுட்பக் கையேடுகளையும், இதர பணிகளையும் ஆய்வு செய்து விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்பங்களை உழவர் பயிற்சி நிலையத்தின் வாயிலாக உரிய

பருவத்தில் வழங்கிட ஆலோசனை வழங்கினார். இந்த ஆய்வின்போது உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் சாந்தி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) நாகேந்திரன் மற்றும் வேளாண் அலுவலர் ராஜசேகரன் உள்ளிட்ட பலர்உடனிருந்தனர்.

**வேளாண் கண்காட்சி, சம்பா முன்பருவ முனைப்பு முகாம்**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை அருகே திருமலைராயசமுத்திரத்தில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்தில் வேளாண் கண்காட்சி-2014 மற்றும் சம்பா முன்பருவ முனைப்பு இயக்கம் நடைபெற்றது. திருச்சி நவலூர் குட்டப்பட்டு அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரியில் வேளாண் பட்டப்படிப்பு இறுதியாண்டு பயிலும் 11 மாணவர்கள் கொண்ட குழுவினர், கல்லூரி முதல்வர் பாண்டியராஜன், பேராசிரியர் தியாகராஜன், உதவிப்பேராசிரியர் குருநாதன் மற்றும் புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ரவிச்சந்திரன் ஆகியோரின் வழி நடத்தலின்படி புதுக்கோட்டை வட்டாரத்தில் ஊரக வேளாண்மை அனுபவ களப்பயிற்சியினை கடந்த மூன்று மாதம் மேற்கொண்டனர். இந்த களப்பயிற்சியின் இறுதிக்கட்டமாக வேளாண்மை கல்லூரி மாணவர்கள், புதுகை வேளாண் துறை மற்றும் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் திருமலைராயசமுத்திரம் கிராமத்தில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்தில் வேளாண் கண்காட்சி-2014 மற்றும் சம்பா முன்பருவ முனைப்பு இயக்கம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கலெக்டர் மனோகரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வேளாண் கண்காட்சியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். புதுகை வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான் தலைமை உரையும், திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி முதல்வர் பாண்டியராஜன், குடுமியான்மலை வேளாண் கல்லூரி தனி அலுவலர் கஜேந்திரன் ஆகியோர் திட்ட விளக்கவுரையும், வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் பேராசிரியை ஞானமலர் தொழில்நுட்பம் குறித்தும் உரையாற்றினர். வேளாண் கல்லூரி மாணவர்கள் கண்காட்சியில் வளர்ந்து வந்த புதுக்கோட்டை மற்றும் வருங்கால புதுக்கோட்டை என்ற தலைப்பில் 15 பிரிவுகளாக அமைத்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் வேளாண்

விஞ்ஞானிகள், வேளாண் அலுவலர்கள் மற்றும் விவசாயப் பெருமக்கள் நூறுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். நிறைவாக வேளாண் கல்லூரி மாணவத் தலைவர் பழனி நன்றியுரை கூறினார்.

**அ.வாடிப்பட்டியில் பண்ணை நிர்வாக மாதிரி**

தேவதானப்பட்டி, : தேவதானப்பட்டி அருகே அ.வாடிப்பட்டியில் ஒருங்கிணைந்த பண்ணை நிர்வாக மாதிரியை கல்லூரி மாணவிகள் அமைத்தனர்.குள்ளப்புரம் வேளாண்மை தொழில்நுட்பக் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள் தீபிகா, தேவிசந்திரவதனா, சத்யா, ஜீது, கீர்த்தி, அஞ்சிதா, பவித்ரா ஆகியோர் அ.வாடிப்பட்டியில் நடந்த விழாவில் ஒருங்கிணைந்த பண்ணை நிர்வாக மாதிரியை அமைத்தனர். மேலும் காடுவளர்ப்பு, நீர் மாசுபடுவதை தடுத்தல் மாதிரிகளையும் அமைத்தனர். இவற்றை கலெக்டர் பழனிசாமி, வேளாண்மை இணை இயக்குனர் திலகர் ஆகியோர் பார்வையிட்டனர். ஊராட்சி தலைவர் மஞ்சமாலாபிச்சைமணி, செயலாளர் செல்லப்பாண்டி ஆகியோர்உடனிருந்தனர்.

**மரவள்ளிக்கிழங்கு விலை சரிந்தது**

பரமத்திவேலூர், : பரமத்திவேலூரில் மரவள்ளி கிழங்கு விலை சரிந்துள்ளது.நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கு பயிரிட்டுள்ளனர். இப்பகுதிகளில் விளையும் மரவள்ளிக்கிழங்கு பரமத்திவேலூர் சந்தையில் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வாரம் மரவள்ளிக்கிழங்கு ஒரு டன் ரூ7 ஆயிரத்திற்கு விற்பனையானது. இந்த வாரம் ஒரு டன் ரூ6 ஆயிரத்திற்கு விற்பனையானது. விலை சரிவால் மரவள்ளி கிழங்கு பயிரிட்ட விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்

**பரமத்தி வேலூரில் வெல்லம் விலை உயர்வு**

பரமத்தி வேலூர், : நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுக்கா பிலிக்கல்பாளையத்தில் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் செயல்படும் 13

மண்டிகளிலும் வெல்லம் ஏலம் விடப்படுகிறது. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் உருண்டை வெல்லம் 30 கிலோ கொண்ட ஒரு சிப்பம் ரூ1100க்கும், பெரிய அச்சுவெல்லம் 30கிலோ கொண்ட ஒரு சிப்பம் ரூ1200க்கும் ஏலம் போனது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 30 கிலோ கொண்ட உருண்டை வெல்லம் ஒரு சிப்பம் ரூ1250க்கும், 30 கிலோ கொண்ட ஒரு அச்சுவெல்லம் ஒரு சிப்பம் ரூ1250க்கும் ஏலம் போனது. உருண்டை வெல்லம் மொத்தம் 10 ஆயிரம் சிப்பமும், அச்சு வெல்லம் 60 சிப்பமும் ஏலத்திற்கு வந்தது. வெல்லம் விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்து பயன்பெற அழைப்பு**

நாமக்கல், : திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் நடவு செய்து பயன்பெறுமாறு விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து கபிலர்மலை வட்டார வேளாண் உதவி இயக்குனர் தங்க ராஜூ வெளியிட்டுள்ள அறிக்கை:நாமக்கல் மாவட்டத்தில், மழையை பயன்படுத்தி நெல் நடவு செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். விவசாயிகள், திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றலாம். திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்வதால், சிக்கன நீர்பாசனம் மூலம் பாசன நீர் தேவையை குறைக்கலாம். நெல்லுடன் வளரும் களைகளை இயற் கை உரமாக மாற்றலாம்.திருந்திய நெல் சாகுபடி க்கு என, தனியாக நெல் ரகம் இல்லை. அனைத்து வகையான நெல் ரகங்களிலும் திருந்திய நெல் சாகுபடி முறையை மேற்கொள்ளலாம். ஒரு ஏக்கர் நெல் நடவுக்கு, 2 கிலோ சான்று பெற்ற விதை நெல் போதுமானது. அதேபோல், ஒரு ஏக்கர் நடவுக்கு தேவையான நாற்றுக் களை பெற ஒரு சென்ட் நாற்றங்கால் போதுமானது. நாற்று விடும்முன் நாற்றங்கால் பரப்பினை மேடை பாத்தி அமைத்துக் கொள்ள வேண்டும். 14 நாட்கள் வயதுடைய நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். கோனோ வீடர் கருவியைப் பயன்படுத்தி களை எடுக்க வேண்டும். நடவு செய்த, 10ம் நாள் முதல், பத்து நாட்களுக்கு ஒரு முறையாக, 4 முறை களை எடுக்கும் கரு வியை கொண்டு களை க ளை சேற்றில் அமுக்கி விட வேண்டும். இலை வண்ண

அட்டையை பயன்படுத்தி தேவையான தழைச்சத்தை மேலுரமாக இடவேண்டும். இந்த தொழில் நுட்பம் மூலம் லாபம் பெறலாம்.இவ்வாறு உதவி இயக்குனர் தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

**நம்பியூரில் சம்பா சாகுபடிக்கு 10 டன் விதைநெல் இருப்பு**

கோபி, :பவானிசாகர் அணையில் இருந்து கடந்த 15ம் தேதி கீழ்பவானி பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால் கீழ்பவானி பாசனத்தில் உள்ள ஒரு லட்சத்து 3,500 ஏக்கர் விளை நிலங்கள் பயன்பெறுகின்றது. இந் நிலையில் கீழ்பவானி பாசன திட்டத்தில் உள்ள நம்பியூர் பகுதியில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் உள்ளது. இங்கு சம்பா சாகுபடிக்கு தேவையான விதை நெல் நம்பியூரில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி கூறியதாவது: சம்பா சாகுபடிக்கு மத்திய கால ரகங்கள் அதாவது 130 முதல் 135 நாள் வயதுடைய நெல் ரகங்கள் ஏற்றவையாகும். இதற்காக குருமந்துரில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் ஏ.டி.டி.38, ஏ.டி.டி.39, ஏ.டி.டி.45, கோ-43, கோ-50, பி.பி.டி.5204, வெள்ளை பொன்னி உள்ளிட்ட ரகங்கள் மிகவும் ஏற்றவையாகும். இதற்காக இந்த ரக விதை ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் உள்ளது. இங்கு சம்பா சாகுபடிக்கு தேவையான விதை நெல் நம்பியூரில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி கூறியதாவது: சம்பா சாகுபடிக்கு மத்திய கால ரகங்கள் அதாவது 130 முதல் 135 நாள் வயதுடைய நெல் ரகங்கள் ஏற்றவையாகும். இதற்காக குருமந்துரில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் ஏ.டி.டி.38, ஏ.டி.டி.39, ஏ.டி.டி.45, கோ-43, கோ-50, பி.பி.டி.5204, வெள்ளை பொன்னி உள்ளிட்ட ரகங்கள் மிகவும் ஏற்றவையாகும். இதற்காக இந்த ரக விதை நெல் 10 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் உள்ளது. இங்கு சம்பா சாகுபடிக்கு தேவையான விதை நெல் நம்பியூரில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி

கூறியதாவது: சம்பா சாகுபடிக்கு மத்திய கால ரகங்கள் அதாவது 130 முதல் 135 நாள் வயதுடைய நெல் ரகங்கள் ஏற்றவையாகும். இதற்காக குருமந்துரில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் ஏ.டி.டி.38, ஏ.டி.டி.39, ஏ.டி.டி.45, கோ-43, கோ-50, பி.பி.டி.5204, வெள்ளை பொன்னி உள்ளிட்ட ரகங்கள் மிகவும் ஏற்றவையாகும். இதற்காக இந்த ரக விதை நெல் 10 நெல் 10 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் நெல்லில் அதிக மகசூல் பெறுவதற்கு, காற்றில் உள்ள தழைச்சத்தை ஈர்த்து பயிருக்கு கொடுத்து உரச்செலவை குறைக்க உதவும் அசோஸ்பைரில்லம் உயிர் உரங்களும் வழங்கப்படுகிறது. அதனால் மண் வளம் பாதுகாப்பதுடன், ரசாயன உர பயன்பாடும் குறைகிறது. அதே போன்று திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படுகிறது. இவ்வாறு ஆசைத்தம்பி கூறினார்.

**<u>தரமான சான்று பெற்ற விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும் துணை இயக்குனர் வேண்டுகோள்</u>**

ராமநாதபுரம், : தரமான சான்றுபெற்ற விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்யவேண்டும் என வேளாண் துணை இயக்குனர் தெரிவித்துள்ளார். விதை விற்பனையாளர்களுக்கு வேளாண் விதை ஆய்வு துணை இயக்குனர் மணிமாறன் விடுத்த அறிக்கையில்,ஆவணி மாதம் இரண்டாம் வாரத்தில் மழையை எதிர்பார்த்து ராமநாதபுரம் மாவட்டத்தில் நெல் மானாவரி விதைப்பு பணிகளை விவசாயிகள் தொடங்க உள்ளனர். இத்தருணத்தில் சான்றுபெற்ற தரமான விதைகளை விதை விற்பனையாளர்கள் விவசாயிகளுக்கு வழங்கவேண்டும். பிபிடி 5204, ஜேஜேஎல் 1798, என்எல்ஆர் போன்ற நெல் ரகங்கள் அதிக அளவில் இம்மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. ஆந்திர மாநிலம் வாராங்கால் மற்றும் கர்நாடகா மாநிலத்தில் இருந்து இவ்விதை ரகங்கள் பெறப்பட்டு தனியார் விதை விற்பனையாளர்கள் மூலம் விவசாயி களுக்கு விநியோகிக்கப்படுகிறது.விதைகளை கொள்முதல் செய்யும் தனியார் விதை விற்பனையாளர்கள் சில நடைமுறைகள் கடைப்பிடிக்க அறிவுறுத்தப் பட்டு உள்ளது. பிறமாநில விதைகளை கொள்முதல் செய்யும்போது படிவம் 2

கண்டிப்பாக பெறவேண்டும். தொலைவில் இருந்து கொள்முதல் செய்துவரும் விதைகள் பல நாட்கள் கழித்து இங்கு சேர்கிறது. இந்த விதைகள் வந்தவுடன் இதன் முளைப்பு திறன் மற்றும் தரத்தினை சோதனை செய்து பின்னர் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய வேண்டும். விற்பனையின்போது, விற்பனை பட்டியல் வழங்க வேண்டும். அதில் பயிர் ரகம், குவியல் எண், காலாவதி நாள் குறிப்புடன் விவசாயிகளிடம் கையொப்பம் பெற வேண்டும். நேரடியாக விதைகளை கிராமத்திற்கு கொண்டு சென்று விற்பனை செய்பவர்கள் மீது உடனடி புகார் செய்யலாம். உரிமம் எடுக்காமல் விதை விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அதிக மகசூல் பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட விதை விற்பனையாளர்களிடமே விவசாயிகள் விதைகளை வாங்கி பயனடையவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இன்றைய வேளாண் செய்திகள்

**இமயமலையில் அதிசய மூலிகை: சஞ்சீவனி என்கின்றனர் ஆய்வாளர்கள்**

இமயமலையில் இந்திய விஞ்ஞானிகள் அதிசய மூலிகையை கண்டு பிடித்துள்ளனர். அது சஞ்சீவனி என்று தெரிவிக்கின்றனர். இந்திய விஞ்ஞானிகளுக்கு உடலில் பாதுகாப்பு அமைப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு அதிசயம் மூலிகை கிடைத்தது. உயிர்வாழ்வதற்கே கடினமான பகுதிகள் கொண்ட இமயமலையில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ள இந்த அதிசய மூலிகை கதிர்வீச்சு பாதிப்பில் இருந்து மக்களை காப்பாற்றும். சவாலான வாழ்விடச் சூழலில் மக்களை பாதுகாத்து கொள்ளும் சக்தியை வழங்கும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மூலிகை ராமாயணத்தில் அனுமார் கொண்டு வந்ததாகக் கருதப்படும் சஞ்சீவனி மூலிகை போன்று உள்ளது. என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து மூலிகை தொடர்பாக

விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர். இந்திய இந்து மதம் காவியங்களில் சஞ்சீவினி மூலிகை உயிரினங்களுக்கு உயிர் கொடுக்கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. ரோடியோலா என்ற அந்த மூலிகையை ஆய்வாளர்கள் சஞ்சீவினி மூலிகை என்றே கருதுகின்றனர். ரோடியோலா சீனா மற்றும் அமெரிக்க நாடுகளிலும் கண்டுபிடிக்கப்பட்ட்டுள்ளது. அங்கு மூலிகை மலைப்பிரதேசங் களில் உயிர்களைப் பாதுகாக்கும் பாரம்பரிய சீன மருத்துவத்தில் பயன்படுத்தப் படுகிறது. மங்கோலியாவில் மருத்துவர்கள் காசநோய் மற்றும் புற்றுநோய் அதனை பயன்படுத்துகின்றனர். ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் லாடக் பகுதியில் இந்த மூலிகை 'சோலோ' என்று அழைக்கப்படுகிறது. லாடக்கில் உள்ள மனிதர்கள் இதன் இலைகளை உணவுப் பொருட்களாக பயன்படுத்தி வருகின்றனர். இந்த மூலிகையின் அரிய குணங்கள் இன்னும் கண்டுபிடிக்கப் படாமலே உள்ளது. மலைப்பகுதி ஆய்வுக்கான ராணுவ அமைப்பின் விஞ்ஞானிகள் இதன் மருத்துவ குணங்களை ஆராய்ந்து வருகின்றனர். ரோடியோலா என்று அழைக்கப்படும் இந்த மூலிகை உடலின் இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துகிறது. கடினமான வாழ்விடச் சூழலில் நம்மை தகவமைத்துக் கொள்வதற்கான சக்தியை வழங்குகிறது. மேலும், ரேடியோ கதிர் வீச்சு விளைவுகளில் இருந்தும் பாதுகாக்கும். என்று ஆய்வுக் கழகத்தின் இயக்குநர் ஆர்.பி.ஸ்ரீவஸ்தவா தெரிவித்துள்ளார். ரசாயன ஆயுதங்கள், வெடிகுண்டுகள் ஆகியவை வெளிப்படுத்தும் நச்சுக் கதிரியக்கத் தின் விளைவுகளையும் இந்த மூலிகை அகற்றும். மன உளைச்சல், கவலை ஆகியவற்றுக்கு சிறந்த நிவாரணியாகவும் இருக்கும். ஜீரண சக்திகளை மேம்படுத்தும் குணங்களும் இந்த மூலிகைக்கு இருப்பதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். உலகின் மிக உயரமான போர்க்களமாக கருதப்படுவது ஜம்மு காஷ்மீர் மாநிலம் லடாக் மாவட்டத்தில் உள்ள பனிசூழ்ந்த சியாச்சின் மலைப் பகுதியில் ஆகும். இந்த பகுதியை பாதுகாக்கும் பணியில் நமது ராணுவ வீரர்களுக்கு இந்த மூலிகை உதவியாக இருக்கும். ரோடியோலா மூலிகை குறித்து ஏற்கனவே பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆய்வு செய்து வருகிறது.

**குமரி மாவட்ட அணைகளின் நீர்மட்டம் தொடர்ந்து உயருகிறது ஒரே நாளில் பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 1¼ அடி உயர்வு**

குமரி மாவட்ட அணைகளின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து கொண்டிருக் கிறது. ஒரேநாளில் பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 1¼ அடி உயர்ந்துள்ளது. தண்ணீர் வரத்து குறைவு

குமரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு கன மழை பெய்ததைத் தொடர்ந்து அணைகளுக்கு அதிக அளவு தண்ணீர் வரத்து இருந்தது. இதனால் அணைகளின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. கடந்த 2 நாட்களாக மழை இல்லாததால் அணைகளுக்கு வரும் தண்ணீரின் வரத்து குறைந்துள்ளது. இருந்தாலும் அணைகளின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து கொண்டிருக்கிறது.

பேச்சிப்பாறை அணைக்கு நேற்று முன்தினம் 1963 கன அடியாக வந்து கொண்டிருந்த தண்ணீர் வரத்து நேற்று 627 கன அடியாகவும், பெருஞ்சாணி அணைக்கு 2092 கன அடி வந்து கொண்டிருந்த தண்ணீர் வரத்து நேற்று 738 அடியாகவும், சிற்றார்–1 அணைக்கு 261 கன அடி வந்து கொண்டிருந்த தண்ணீர் நேற்று 116 அடியாகவும், சிற்றார்–2 அணைக்கு 416 கன அடி வந்து கொண்டிருந்த தண்ணீர் நேற்று 175 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணைக்கு 25 கன அடி வந்து கொண்டிருந்த தண்ணீர் நேற்று 9 அடியாகவும் குறைந்தன.

நீர்மட்டம் தொடர்ந்து உயர்வு

தண்ணீர் வரத்து குறைந்தாலும் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதால் நேற்று முன்தினம் 17.40 அடியாக இருந்த பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் நேற்று 18.10 அடியாகவும், 54.75 அடியாக இருந்த பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் நேற்று 55.95 அடியாகவும், 9.38 அடியாக இருந்த சிற்றார்–1 அணையின் நீர்மட்டம் 9.77 அடியாகவும், 9.48 அடியாக இருந்த சிற்றார்–2 அணையின் நீர்மட்டம் 9.87 அடியாகவும், 50.03 அடியாக இருந்த மாம்பழத் துறையாறு அணையின் நீர்மட்டம் 50.69 அடியாகவும், 8.40 அடியாக இருந்த முக்கடல் அணையின் நீர் உயர்ந்துள்ளன. ஒரே நாளில் பேச்சிப்பாறை

அணையின் நீர்மட்டம் முக்கால் அடியும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 1¼ அடியும், மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் அரை அடியும், முக்கடல் அணையின் நீர்மட்டம் 1 அடியும், உயர்ந்துள்ளது. வாய்க்கால்கள் மற்றும் ஆறுகளில் தண்ணீர் ஓடிக்கொண்டிருப்பதாலும், குளங்களிலும் ஓரளவுக்கு தண்ணீர் இருப்பதாலும் அணைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

**<u>விவசாயிகள் பயனடையும் வகையில் உணவு தானிய சேமிப்பு பயிற்சியுடன் வங்கி கடனுதவி திட்டம்</u>**

சேடபட்டி அருகே உள்ள எஸ்.கோட்டைப்பட்டியில் உணவு தானிய சேமிப்பு பயிற்சி பற்றியும், வங்கி கடனுதவி திட்டம் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கி கூறும் சிறப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது.

<u>பயிற்சி</u>

மதுரையை அடுத்த சேடபட்டி அருகே உள்ள எஸ்.கோட்டைப்பட்டி பராசக்தி கல்வியல் கல்லுாரியில் மத்திய சேமிப்பு கிடங்கு சார்பில் தானிய சேமிப்பு தொழில் நுட்ப பயிற்சி முகாம் 2 நாட்கள் நடைபெற்றது. இந்த பயிற்சி முகாமில் சேடபட்டி பகுதியை சேர்ந்த சுமார் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். சென்னை மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனம் முதுநிலை உதவி மேலாளர் மரியதாஸ், மதுரை மத்திய சேமிப்பு கிடங்கு மேலாளர் குமார், கண்காணிப்பாளர் ஜெயராம் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு உணவு தானிய சேமிப்பு குறித்த பயிற்சிகளை அளித்தனர். இதில் உற்பத்தி செய்த தானியங்களை பூச்சி, எலி, ஈரப்பதம் போன்றவற்றிலிருந்து பாதுகாத்து சேமிக்கும் முறை குறித்து, சேடபட்டியில் உள்ள அரசு தானிய கிடங்கில் விவசாயிகளுக்கு விளக்கிகாட்டியும், அறிவியல் முறையில் உணவு தானியங்களை சேமிக்கும் முறை குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

<u>வங்கிகளில் கடன்</u>

தானியங்கள் உற்பத்தி செய்த காலங்களில் அவற்றின் விலை குறைவாக இருந்தால், தானியங்களை கெட்டுப்போகாமல் சேமித்து வைத்து, விலை ஏற்றம் வரும்போது, விற்பனை செய்தால் கிடைக்கும் அதிக வருவாய் குறித்தும்

விளக்கப்பட்டது. மேலும் சேமித்து வைக்கும் உணவு தானிங்களுக்காக கொடுக்கப்படும் ரசீதை கொண்டு, தேவைப்படும் நேரங்களில் அருகில் உள்ள வங்கிகளில் விவசாயிகள் குறைந்த வட்டியில் பணம் கடனாக பெற்று கொள்ளலாம். இதற்கான வழிமுறைகளை அதிகாரிகள் விவசாயிகளுக்கு விளக்கி கூறினர். நிகழ்ச்சியின் நிறைவு நாளில் எஸ்.கோட்டைப்பட்டி பராசக்தி கல்வியல் கல்லுாரியின் தாளாளர் ஜெகதீசன் தலைமை தாங்கினார். கல்லுாரி நிர்வாகி சுவாமிநாதன் முன்னிலை வகித்தார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் அனைவருக்கும் சான்றிதழ்களும், தானியம் சேமிக்கும் உபகரணங்களும் வழங்கப்பட்டது. மேலும் பயிற்சி குறித்தான விவசாயிகளின் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

**<u>விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைக்க அரசு சார்பில் விதை உற்பத்தி ஆணையம் தொடக்கம் வேளாண் இயக்குநர் தகவல்</u>**

தமிழக விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்யும் விதத்தில் விதை உற்பத்தி ஆணையத்தை தமிழக அரசு தொடங்க இருப்பதாக வேளாண் துறை இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

சான்றிதழ் வழங்கும் விழா

மத்திய வேளாண் அமைச்சகம் மூலம் உரம், பூச்சி மருந்து விற்பனையாளர் களுக்கான பயிற்சியை மதுரை வாப்ஸ் நிறுவனம் நடத்தி வருகிறது. இந்த பயிற்சியை நிறைவு செய்த விற்பனையாளர்களுக்கு தமிழக அரசின் வேளாண் இயக்குநர் ராஜேந்திரன் சான்றிதழ்களை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:- தமிழக அரசு விவசாய துறையை ஊக்குவித்து வருவதால் விவசாயம் லாபகரமான தொழிலாகி மாறி வருகிறது. தமிழக இளைஞர்கள் விவசாய தொழில்களை தொடங்க ஆர்வம் காட்டுகின்றனர். உயர்கல்வியை பொருத்தமட்டில் மருத்துவ துறைக்கு அடுத்து வேளாண் படிப்புக்கு மதிப்பு அதிகரித்துள்ளது. தகுந்த அறிவியல் நுட்பத்துடன் ஒரு குறிப்பிட்ட நிலத்தில் விவசாயி என்ன பயிரிடலாம் என்று வேளாண் துறை அறிவுறுத்துகிறது. தமிழகத்தில் தற்போது 43 லட்சம் எக்டர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப் படுகிறது. விவசாயிகளின் அறிவை மேம்படுத்த அட்மா திட்டம் உள்பட

பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்துகிறது. இவற்றை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

விதை ஆணையம்

வேளாண்மையில் நல்ல மகசூல் கிடைக்க தரமான விதை அவசியம். தமிழக விவசாயிகளுக்கு தரமான விதை கிடைக்கும் வகையில் விதை உற்பத்தி ஆணையத்தை அரசு தொடங்க உள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு தரமான விதை கிடைக்கும். விவசாயிகளிடம் அரசு அதிக அளவில் விதை கொள்முதல் செய்யும் என்பதால் விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்கும். வருங்காலங்களில் சிறுதானியங்களின் உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. பயிர்களுக்கு தவறாக இடப்படும் பூச்சிமருந்துகளும், உரங்களும் பயிரை முற்றிலும் அழித்து விவசாயிக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி விடுகின்றன. இது போல் தவறான பூச்சி மருந்துகள் பரிந்துரைக்கப்படுவதை தடுக்க இடுபொருள் விற்பனையாளர் களுக்கு வாப்ஸ் நிறுவனம் நடத்தும் இடுபொருள் விற்பனை செய்வது குறித்த பட்டய பயிற்சி உதவும். இவ்வாறு அவர் பேசினார்.

வரவேற்பு

முன்னதாக நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களை வாப்ஸ் நிறுவன செயலாளர் அருள் வரவேற்றார். மத்திய வேளாண் துறை அதிகாரி வெங்கட்ரெட்டி, மதுரை வேளாண் கல்லூரி முதல்வர் சின்னுசாமி மற்றும் மதுரை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை உள்பட பலர் பேசினர். முடிவில் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் பெரியசாமி நன்றி கூறினார்.

**<u>விலையில்லா கறவை பசுக்கள் மூலம் தமிழகத்தில் பால் உற்பத்தி அதிகரிப்பு அமைச்சர் ஜெயபால் பேச்சு</u>**

விலையில்லா கறவை பசுக்கள் மூலம் தமிழகத்தில் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது என அமைச்சர் ஜெயபால் கூறினார்.

திறப்புவிழா

திருமருகல் ஒன்றியம் விற்குடி ஊராட்சியில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் விழா மற்றும் நியாய விலைக்கடை திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு நாகை மாவட்ட

கலெக்டர் முனுசாமி தலைமை தாங்கினார். கோபால் எம்.பி., தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி துணை தலைவர் ஆசைமணி, ஒன்றியக்குழு துணைத்தலைவர் ராதாகிருட்டிணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் அமைச்சர் ஜெயபால் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்களை வழங்கியும், நியாய விலைக்கடை கட்டிடத்தை திறந்து வைத்தும் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

முதல்-அமைச்சர் ஜெயலலிதா 2-ம் பசுமை புரட்சிக்கு வித்திட்டு விவசாயத் திற்கும், அதனோடு ஒன்றிணைந்த கால்நடைத்துறைக்கும் முக்கியத்துவம் அளித்து திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். கால்நடைகளை பராமரிக்க தேவையான மருத்துவ வசதிகள், மருத்துவமனைகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் செய்து வருகிறார். விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகளை விதவைகள், ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு வழங்கினால் அவர்களின் வாழ்விற்கு உறுதுணை யாக இருக்கும் என்ற காரணத்தால் இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்.

பால் உற்பத்தி அதிகரிப்பு

ஏழைகளுக்கு வழங்கப்படும் இந்த கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகளை கால்நடை டாக்டர்கள் 15 தினங்களுக்கு ஒரு முறை நேரில் சென்று மருத்துவ பரிசோதனை செய்கின்றனர். விலையில்லா கறவை பசுக்கள் மூலம் தமிழகத்தில் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. தமிழக அரசின் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி மக்கள் வாழ்க்கை தரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் மாவட்ட கலெக்டர் முனுசாமி பேசியதாவது:-

முதல்-அமைச்சர் ஜெயலலிதாவின் சிறப்பு திட்டங்களில் ஒன்றான ஏழை தாய்மார்களுக்கு விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டங்களின் கீழ் கடந்த 3 ஆண்டுகளாக நாகை மாவட்டத்தில் 1,950 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள் ரூ.6 கோடியே 90 லட்சம் மதிப்பிலும், 13 ஆயிரத்து 690 குடும்பங்களுக்கு தலா 4 வெள்ளாடுகள் வீதம் 54 ஆயிரத்து 760 வெள்ளாடுகள் ரூ.17 கோடியே 60

லட்சத்திலும் வழங்கப்பட்டுள்ளது. கிராமப்புற மக்களை முன்னிலைப்படுத்தி முதல்-அமைச்சரால் நிறைவேற்றப்படும் திட்டங்களை பொதுமக்கள் பெற்று தங்களது வாழ்க்கை தரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நியாயவிலைக்கடை

முன்னதாக விற்குடி ஊராட்சியில் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி உள்ளூர் மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.7 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாயவிலைக்கடை புதிய கட்டிடத்தை அமைச்சர் ஜெயபால் திறந்து வைத்தார். கால்நடை பராமரிப்பு துறையில் 3 ஆண்டுகளில் செயல்படுத்தப் பட்ட திட்டங்கள் குறித்த கையேட்டினை அமைச்சர் ஜெயபால் வெளியிட, கலெக்டர் முனுசாமி பெற்றுக்கொண்டார்.

விழாவில் மண்டல இணை இயக்குனர் கால்நடை பராமரிப்பு துறை ராஜசேகரன், உதவி கலெக்டர் சிவப்பிரியா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கலியபெருமாள், தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்க தலைவர்கள் ஆறுமுகம், திருமேணி, முத்துக்குமார், திட்டச்சேரி பேரூர் கழக செயலாளர் முய்னுதீன், ஊராட்சி மன்ற தலைவர்கள் நளபதி, சுல்தான் ஆரிப் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>ராமேசுவரம் பகுதியில் அதிகம் விற்பனையாகும் நாவல் பழம்</u>

ராமேசுவரம், தங்கச்சிமடம் பகுதியில் பல இடங்களிலும், தோப்புகளிலும் நாவல் பழ மரங்கள் அதிகம் உள்ளன. அதிராமேசுவரம் வடகாடு, ஏரகாடு, செம்மடம், தங்கச்சிமடம் தண்ணீர் ஊற்று என பல பகுதிகளில் அவற்றின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. தற்போது அவற்றில் இருந்து அதிக அளவில் பழங்கள் கிடைக்கும் நிலையில் ராமேசுவரம் பகுதியில் அவற்றின் விற்பனை களைகட்டி உள்ளது. பழங்கள் மண்ணில் விழுவதை தடுக்க மரத்தில் பல்வேறு இடங்களில் சிறிய வலைகளை கட்டி வைத்துள்ளனர். அதில் விழும் பழங்களை சேகரித்து தினந்தோறும் காலையில் விற்பனை செய்கின்றனர். அவற்றை சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் வாங்கி சுவைக்கின்றனர். மருத்துவ குணம்

உள்ளவை என்பதுடன் சுவையும் அதிகமாக இருப்பதால் அவற்றின் விற்பனை அதிகரித்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

**நெல்லில் வீரிய நாற்றுகளை பெறுவதற்கான தொழில்நுட்பங்கள்**

தானிய பயிர்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததும், முதன்மை பயிராகவும் பயிரிடப்படும் நெற் பயிரை பொறுத்தவரை அதன் மகசூலை தீர்மானிப்பதில் மிகவும் முக்கிய காரணியாக கருதப்படுவது தரமான நாற்றுகளாகும். அத்தகைய தரமான, வீரிய நாற்றுகளை பெற கீழ்காணும் தொழில்நுட்பங்களை பின்பற்றலாம்.

நிலம்தேர்வு

நாற்றங்கால் அமைப்பதற்கு நல்ல வடிகால் வசதியுடைய நீர் வளம் மிகுந்த நிலத்தை தேர்வு செய்ய வேண்டும். ஒரு எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்வதற்கு 20 சென்ட் பரப்பளவில் நாற்றங்கால் அமைக்க வேண்டும். திருந்திய நெல் சாகுபடியாக இருந்தால் 2.5 சென்ட் அளவு இருந்தாலே போதுமானதாகும். தேர்வு செய்யப்பட்ட பகுதியில் 1 டன் மக்கிய தொழு உரம் இட்டு நன்கு நீர் பாய்ச்சி 2–3 முறை சேற்று உழவு செய்தல் வேண்டும். பின்னர் நன்கு சமப்படுத்தி தேவைக்கேற்ப பாத்திகள் அமைத்து கொள்ள வேண்டும். தரமான விதை, நாற்றுகளே பயிரின் செழுமையான வளர்ச்சி, மகசூலுக்கு உதவுகிறது. எனவே பூச்சி, நோய் தாக்காத தரமான விதைகளை தேர்வு செய்ய வேண்டும். இந்த விதைகளுக்கு உப்பு கரைசலை பயன்படுத்தலாம். அதாவது 10 லிட்டர் நீருடன் தேவையான அளவு உப்பு சேர்த்து (முட்டையின் மேல் பகுதி மிதக்கும் வரை) பின்னர் அதில் தேர்வு செய்யப்பட்ட விதைகளை இட வேண்டும். மிதக்கும் விதைகளை நீக்கி விட்டு மூழ்கி இருக்கும் தரமான விதைகளை சேகரித்து விதைப்பதன் மூலம் தரமான மற்றும் 100 சதவீதம் முளைப்பு திறனை உறுதி செய்யலாம்.

விதைநேர்த்தி

நெல்லில் விதை அளவானது அதன் ரகங்களை பொறுத்து மாறுபடும். அதாவது குறுகிய கால ரகங்களாக இருந்தால் 60 கிலோவும், மத்திய கால ரகங்களாக

இருந்தால் 40 கிலோவும், நீண்ட கால ரகங்களாக இருந்தால் 30 கிலோ விதையும் ஒரு எக்டேருக்கு தேவைப்படும். திருந்திய நெல் சாகுபடி செய்வதற்காக எக்டேருக்கு 8 கிலோ விதையிருந்தாலே போதுமானதாகும். ஒரு கிலோ விதைக்கு ஒரு லிட்டர் தண்ணீருடன் கார்பன்டாசிம் அல்லது டிரைசைக்லோஜால் 2 கிராம் கலந்து 10 மணி நேரம் ஊற வைத்து பிறகு நீரை வடிகட்ட வேண்டும். இவ்வாறு விதைநேர்த்தி செய்யப்பட்ட விதைகளை சாக்குப்பையில் கட்டி 24 மணி நேரத்திற்கு இருட்டில் வைத்து விதைப்பதன் மூலம் குலைநோய், இதர விதை சார்ந்த நோய்களில் இருந்து பயிரினை பாதுகாக்கலாம். இயற்கை வழியில் விதை சார்ந்த நோய்களை கட்டுப்படுத்த ஒரு விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் கொண்டு விதைநேர்த்தி செய்தல் வேண்டும். மேலும் உயிர் உரங்களை கொண்டு விதைநேர்த்தி செய்வதன் மூலம் ரசாயன உரங்களின் பயன்பாட்டினை 25 சதவீதம் வரை குறைக்கலாம். இவ்வாறு விதைநேர்த்தி செய்யப்பட்ட விதைகளை தயார் நிலையில் உள்ள நாற்றங்காலில் விதைக்க வேண்டும்.

<u>நீர்–ஊட்டச்சத்துமேலாண்மை</u>

விதைத்து 20–24 மணி நேரம் கழித்து நீரை வடித்துவிட வேண்டும். 3–5 நாட்களுக்கு நாற்றங்காலானது போதுமான ஈரப்பதம் இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும். பின்னர் நாற்றுகளின் வளர்ச்சிக்கேற்ப நீரை உயர்த்த வேண்டும். 1.5 செ.மீ.–2.5 செ.மீ. உயரம் வரை நீர் இருக்குமாறு பராமரிக்க வேண்டும். விதைத்த 15–வது நாளில் டை அம்மோனியம் பாஸ்பேட் உரத்தினை 1 சென்ட் நாற்றங்கால் பரப்பிற்கு 2 கிலோ விதம் இடுவதன் மூலம் செழுமையான நாற்றுகளை பெறலாம். களிமண்ணின் தன்மை அதிகமாக இருக்கும்பட்சத்தில் நாற்று பறிப்பதற்கு அல்லது பிடுங்குவதற்கு முதல் நாள் 20 கிலோ ஜிப்சம் இடுவதன் மூலம் நாற்றுகளை வேருடன் முழுமையாக பெறலாம். நாற்றங்காலில் வளரும் களைகளை கட்டுப்படுத்த முளைக்கும் முன் களைக்கொல்லியான பிரட்லாக்லோர் 200 மி.லி. வீதம் 3 அல்லது 4–வது நாளில் நாற்றங்காலில் தெளிக்க வேண்டும். களைக்கொல்லி இடும்போது சிறிது

நீர் இருப்பது நல்லது. மேலும் களைக்கொல்லி இட்ட 48 மணி நேரத்திற்கு நீர் கட்டுவதையோ அல்லது வடிப்பதையோ தவிர்ப்பதன் மூலம் களைக்கொல்லி யின்முழுபயனையும்பெறலாம்.

<u>இலைப்பேன்</u>

நாற்றங்கால் பருவத்தில் படைப்புழு, இலைப்பேன் மற்றும் பச்சை தத்துப்பூச்சி போன்ற பூச்சி தாக்குதலும், குலைநோய் மற்றும் துங்ரோ போன்ற நோய்களும் நாற்றுகளை தாக்குகின்றன. எனவே பூச்சி, நோய் தாக்குதலின் பரிந்துரையின் அடிப்படையில் நோய் மேலாண்மை முறைகளை கையாள்வதன் மூலம் வீரிய நாற்றுகளை உற்பத்தி செய்யலாம். இவ்வாறு வளர்க்கப்பட்ட நாற்றுகளானது 22–25 நாட்களுக்குள் நடவிற்கு பயன்படுத்தப்படுகிறது. திருந்திய நெல் சாகுபடிக்கு பாய் நாற்றங்காலின் உற்பத்தி செய்யும் நாற்றினை 12–14 நாட்களுக்குள் நடவு செய்திட வேண்டும். எனவே மேற்கூறிய முறைகளை ஒருங்கிணைந்து பின்பற்றுவதன் மூலம் தரமான வீரிய நாற்றுகளை உற்பத்தி செய்து நடவுக்கு பயன்படுத்தலாம்.

## <u>ஆந்திராவில் பலத்த மழை எதிரொலி பூண்டி ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு</u>

ஆந்திர மாநிலம் மற்றும் பூண்டி ஏரி நீர் பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை காரணமாக பூண்டி ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது.

பலத்த மழை

கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின்படி கடந்த 5–ந் தேதி முதல் ஆந்திர மாநிலம் நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. தொடக்கத்தில் வினாடிக்கு 100 கனஅடி வந்தது. பின்னர் அது படிப்படியாக உயர்ந்து தற்போது அதிக அளவில் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பூண்டி ஏரியின் உயரம் 35 அடி. நேற்று காலை நீர் மட்டம் 22.83 அடியாக பதிவானது. ஏரிக்கு வினாடிக்கு 405 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. மேலும் ஆந்திர மாநிலம் மற்றும் பூண்டி ஏரி நீர் பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக பூண்டி ஏரிக்கு 529 கனஅடி மழை நீர் வந்து கொண்டிருக்கிறது.

தண்ணீர் வரத்து அதிகரிப்பு

இதனால் பூண்டி ஏரிக்கு நீர் வரத்து அதிகரித்து உள்ளது. அதாவது, கிருஷ்ணா நதி நீர் மற்றும் மழை நீர் கலந்து பூண்டி ஏரிக்கு வினாடிக்கு 934 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பூண்டி ஏரியில் நேற்று காலை 556 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. கடந்த 5–ந் தேதி தண்ணீர் மட்டம் 17.22 அடியாகவும், வெறும் 76 மில்லியன் கனஅடி தண்ணீர் மட்டும்தான் இருப்பு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு கடந்த 5–ந் தேதியில் இருந்து நேற்று காலை வரை 710 மில்லியன் கனஅடி தண்ணீர் வந்து உள்ளது. பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு வினாடிக்கு 483 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது.

<u>**தாராபுரம் அருகே பண்ணை குட்டை–தடுப்பணையினால் 13 ஆயிரம் ஏக்கரில் மானாவாரி சாகுபடி செழித்து வளரும் மக்காசோளம்**</u>

உலகில் வளர்ந்து வரும் நாடுகளில் இந்தியாவின் மக்கள் தொகை கூடிக் கொண்டே போகிறது. ஆனால் தானிய சாகுபடி பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. ஆண்டுக்கு ஆண்டு மழையும் எதிர்பார்த்த அளவு பொழிவது இல்லை. உலக வங்கி ஒரு பக்கம் விவசாயத்திற்கும், ஏழை மக்களுக்கும் வழங்கப்படும் மானியத்தை நிறுத்து என இந்தியாவுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் அதற்கு எச்சரிக்கை விடுக்கும் விதமாக மத்திய மாநில அரசுகள் விவசாயத்திற்கு ஊக்கம் அளித்து, தானிய உற்பத்தியை அதிகரிக்க தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

<u>மேலாண்மைதிட்டம்</u>

மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் மூலம் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளை கண்டறிந்து அங்கு ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப் படுகிறது. தமிழகத்தில் குறிப்பாக திருப்பூர் மாவட்டம் மழை குறைவாக பெய்யும் மாவட்டம் என்பதால் ஏராளமான நிலங்கள் தரிசாக கிடக்கின்றன. அந்த நிலங்களில் தானிய உற்பத்தியை பெருக்க நீர்வடிப்பகுதி அமைந்துள்ள கிராம ஊராட்சி, நீர்வடி பகுதி குழு, திட்டப்பணிகள் அந்தந்த நீர்வடிப்பகுதிக்கு

தேவையான பணிகளை தேர்ந்தெடுத்து கிராமசபையின் ஒப்புதலை பெற்று, கலெக்டர் கோவிந்தராஜ் மற்றும் மாவட்ட நீர்வடி பகுதி மேம்பாட்டு முகமை அலுவலரின் நிர்வாக அனுமதியின்படி அந்த கிராமத்தில் உள்ள பயனாளிகள் குழு மூலம் இயற்கை வள மேம்பாட்டு பணிகள்–வளர்ச்சிப்பணிகள் செயல் படுத்தப்படுகிறது. இந்த திட்டமானது தாராபுரம், மூலனூர், மாம்பாடி, நாதம்பாளையம், பெரமியம், பகுதிகளில் அந்தந்த பகுதி மக்களின் பங்களிப்பு டன் 13 ஆயிரத்து 547 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

<u>தரிசுநிலங்கள்</u>

அதன்படி ஆண்டு முழுவதும் தரிசாக கிடக்கும் நிலங்களை கண்டறிந்து அங்கு எப்படி விவசாயம் செய்யலாம்? அதற்கான நீர் ஆதாரத்தை பெறவும் முயற்சி செய்யப்பட்டது. அந்த வகையில் தனியார் நிலங்களில் பண்ணை குட்டை அமைக்கப்பட்டது. மழை காலங்களில் இந்த பண்ணை குட்டையில் மழை நீர் தேங்கியது. இதன் காரணமாக அந்த பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது. இந்த நீரை கொண்டு பயறு வகைகளான உளுந்து, பாசிப்பயிறு, எள், சோளம், மக்காசோளம்,நிலக்கடலை மற்றும் இதர காய்கறிகள் சாகுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட திட்டத்தில் மானவாரி நிலங்களில் மா ரகங்களான செந்தூரம், பெங்களூரம், பங்கனப்பள்ளி, காளாப்பாடி, நீலம் ஆகிய ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதை தவிர பி.எஸ்.ஆர்.1, மற்றும் காஞ்சன், ஏன்.ஏ.7 ரக நெல்லியும், பி.கே.எம். 1 சப்போட்டா ரகங்களும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் புளி, பப்பாளி, தர்பூசணி, சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சாகுபடி செய்யப்படும் தானியங்களை உலர வைப்பதற்கு ஆங்காங்கே இந்த திட்டம் மூலம் ரூ.26 லட்சத்தில் உலர் களம் அமைக்கப்பட்டுள்ளது.

<u>திறன்மேம்பாட்டுபயிற்சி</u>

மேற்கண்ட திட்டங்களை கிராம மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி நேரில் அழைத்து சென்று அளிக்கப் படுகிறது. குறிபாக மண்புழு உரம் தயாரிப்பது குறித்து, அந்தந்த பகுதிக்கு அழைத்து செல்லப்பட்டு காண்பிக்கப்படுகிறது. குறிப்பாக இயற்கை வேளாண்மை, மண்புழு வளர்ப்பு, காளான் வளர்ப்பு, மலர்சாகுபடி,

கோழிப்பண்ணை வளர்ப்பு, தீவன வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு என பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மூலனூர், பெரமியம் பகுதிகளில் பட்டா மற்றும் புறம்போக்கு நிலங்களில் இயற்கை வள மேம்பாட்டு பணிகளான பண்ணை குட்டை, கசிவு நீர் குட்டை, தடுப்பணை, மண் வரப்புகள், குட்டைகள் தூர்வாருதல், ரூ.1 கோடியே 77 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த திட்டம் மூலம் நிலமற்ற ஏழை, எளிய மக்களுக்கு வாழ்வாதாரம் பெருகுவதற்கு மகளிர் சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிற்கும் தலா ரூ.24ஆயிரம் வீதம் சுழல்நிதி, ஆடு, மாடு வளர்ப்பிற்கு வட்டியின்றி சுலபத் தவணையில் திருப்பி செலுத்தும் வகையில் சுழல்நிதி ரூ.28 லட்சத்து 22 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரம் பெருகி உள்ளது. பண்ணை உற்பத்தி திட்டத்தின்படி திட்ட ஒதுக்கீட்டில் 80 சதவீதம் மானியத்தில் விவசாய இடுபொருட்கள் ரூ.28 லட்சத்திற்கு வழங்கப் பட்டுள்ளன. மேற்கண்ட திட்டத்தில் வேளாண்காடுகள் அமைத்தல், பழ மரக்கன்றுகள் வளர்த்தல், வேளாண்மை கருவிகள், தேன் வளர்ப்பு, செயல் விளக்கத்துடன் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. எனவே மேற்கண்ட திட்டத்தில் பயன் அடைய விரும்பும் கிராம மக்கள் ஒருங்கிணைந்த நீர் வடிப்பகுதி மேலாண்மை திட்ட அதிகாரிகளை அணுகி பயன்பெறலாம்.